செய்தி வெளியீடு எண்: 224/2018 நாள்: 16.04.2018

**வேலூர் ஊராட்சி பகுதிகளில் "கிராம சுவராஜ் அபியான்" திட்டத்தின் ஒரு பகுதியான ஏழை எளிய மக்களுக்கு எரிவாயு இணைப்பு வழங்கும் "உஜ்வாலா" திட்டப்பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்களும் மத்திய அரசின் கண்காணிப்பு அலுவலர் திரு.ஜெயசீலன் (I.D.A.S.) அவர்களும் இந்திய அரசின் கால்நடைத் துறை துணை செயலாளர் திரு.தீபக்சீதி அவர்களும் நேரில் ஆய்வு!**

வேலூர் ஊராட்சி பகுதிகளில் "கிராம சுவராஜ் அபியான்" திட்டத்தின் ஒரு பகுதியான ஏழை எளிய மக்களுக்கு எரிவாயு இணைப்பு வழங்கும் "உஜ்வாலா" திட்டப்பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்களும் மத்திய அரசின் கண்காணிப்பு அலுவலர் திரு.ஜெயசீலன், (I.D.A.S.) அவர்களும் இந்திய அரசின் கால்நடைத் துறை துணை செயலாளர் திரு.தீபக்சீதி அவர்களும் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டனர்.

14.04.2018 முதல் 05.05.2018 வரை நடைபெறவுள்ள கிராம சுவராஜ் அபியான் இயக்க காலத்தில் வேலூர் மாவட்டத்தில் பின்தங்கிய 74 ஊராட்சிகளில், அரசின் திட்டங்கள் எவ்வாறு செயல்படுத்தப்படுகிறது, இத்திட்டங்களில் விடுபட்ட பொதுமக்களை கண்டறிந்து முழுமையாக பயனடையும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல் போன்ற பணிகளை ஆய்வு செய்ய மத்திய அரசு மாவட்டத்திற்கு கண்காணிப்பு அலுவலர்களை நியமித்துள்ளது. அதனடிப்படையில் வேலூர் மாவட்டம் வேலூர் ஊராட்சியில் உள்ள அப்துல்லாபுரம் மற்றும் சிறுகாஞ்சி ஊராட்சிகளில் மத்திய அரசின் அனைவருக்கும் எரிவாயு வழங்கும் திட்டத்தில் (உஜ்வாலா) பொதுமக்களுக்கு எரிவாயு இணைப்பு வழங்குவதையும், எரிவாயு உருளைகளை பாதுகாப்பாக பயன்படுத்துவது குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவதையும் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள், மத்திய அரசின் கண்காணிப்பு அலுவலர் திரு.ஜெயசீலன், (I.D.A.S.) அவர்கள் மற்றும் மத்திய அரசின் கால்நடைத்துறை துணை செயலாளர் திரு.தீபக்சீதி அவர்களும் நேரடியாக சென்று ஆய்வு செய்தனர்.

அப்துல்லாபுரம் ஊராட்சியில் 722 குடும்பங்கள் உள்ளன. இதில் 620 குடும்பங்களுக்கு எரிவாயு இணைப்புகள் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 102 குடும்பங்களுக்கு எரிவாயு இணைப்பு வழங்க பொதுமக்களிடம் மனுக்கள் பெறப்பட்டுள்ளது. இன்று இக்கிராமத்தில் பொதுமக்களிடமிருந்து 55 மனுக்கள் பெறப்பட்டுள்ளது. சிறுகாஞ்சி ஊராட்சியில் 256 குடும்பங்கள் உள்ளன. இதில் 180 குடும்பங்களுக்கு எரிவாயு இணைப்புகள் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 76 குடும்பங்களுக்கு எரிவாயு இணைப்பு வழங்க பொதுமக்களிடம் மனுக்கள் பெறப்பட்டுள்ளது. இன்று இக்கிராமத்தில் பொதுமக்களிடமிருந்து 26 மனுக்கள் பெறப்பட்டுள்ளது. இம்மனுக்களை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்களும் மத்திய அரசின் கண்காணிப்பு அலுவலர் திரு.ஜெயசீலன், (I.D.A.S.) அவர்களும் மத்திய அரசின் கால்நடைத்துறை துணை செயலாளர் திரு.தீபக்சீதி, அவர்களும் நேரடியாக பெற்றுக் கொண்டு இம்மனுக்கள் மீது வரும் 20 ஆம் தேதிக்குள் நடவடிக்கை எடுக்கப்படும். அதே நாளில் மீண்டும் தங்கள் பகுதிக்கு ஆய்வு மேற்கொள்ள வரும் போது மக்கள் இந்த எரிவாயு இணைப்பு பெறுவதில் உள்ள குறைகள் குறித்து நேரடியாக தெரிவிக்கலாம் என்று மத்திய அரசின் கண்காணிப்பு அலுவலர்கள் பொதுமக்களிடம் கேட்டுக்கொண்டனர்.

இதனை தொடர்ந்து சிறுகாஞ்சி கிராமத்தில் உள்ள வீடுகளுக்கு நேரடியாக சென்று குடும்ப உறுப்பினர்களிடம எரிவாயு இணைப்பு எவ்வளவு கால நேரத்தில் பெற்றார்கள், அதில் சிரமும் ஏதேனும் இருந்ததா, மேலம் எரிவாயு இணைப்பிற்கு அரசு வழங்கிடும் மான்யத்தொகை வங்கிக் கணக்குகளில் முறையாக வந்தடைகிறதா என்றும் எரிவாயு உருளைகளை உபயோகிக்க ஏஜென்ஸிகள் முறையான பயிற்சி அளித்துள்ளனரா, பாதுகாப்பு அம்சங்களை தெளிவு படுத்தியுள்ளனரா என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் மத்திய அரசின் கண்காணிப்பு அலுவலர் அவர்களும் மத்திய அரசின் கால்நடைத்துறை துணை செயலாளர் அவர்களும் கேட்டறிந்தனர்.

இந்நிகழ்ச்சியல் ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.பெரியசாமி, மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.ஜெயக்குமார், இந்தியன் ஆயில் கார்ப்ரேஷன் நிறுவன வேலூர் மண்ட மேலாளர் திரு.ஸ்ரீதர், இந்துஸ்தான் பெட்ரோலிய வேலூர் மண்டல மேலாளர் திரு.ஜோதீஸ், வேலூர் வட்டாட்சியர் திரு.பாலாஜி, வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.செல்வகுமார், நாதன் கேஸ் ஏஜென்ஸி உரிமையாளர் திரு.சிங்காரவேலன், பிரியா கேஸ் ஏஜென்ஸி உரிமையாளர் திரு.தீர்த்தகிரி, அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்துக் கொண்டனர்.

வெளியீடு:
செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், வேலூர்.